**சுருக்கம்**

சிவகங்கை மாவட்டம் – மானாமதுரை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – இலால்குடி, முசிறி, சேலம் மாவட்டம் – தாரமங்கலம், இடங்கணசாலை ஆகிய ஐந்து (5) பேரூராட்சிகளை நகராட்சிகளாக அமைத்துருவாக்கலாம் என்ற உத்தேச முடிவை உறுதி செய்தல் மற்றும் மேற்படி ஐந்து பேரூராட்சிகளை 'நகராட்சிகளாக' அறிவித்தல் (Declared as Municipalities) – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை**

**அரசாணை (நிலை) எண். 117** **நாள்: 07.12.2021**

**திருவள்ளுவர் ஆண்டு 2052**

**பிலவ, கார்த்திகை–21**

**படிக்கப்பட்டது:**

(1) சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் கடிதம் ந.க. எண்.க்யு3/22010/2021, நாள் 29.09.2021.

(2) திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் கடிதம் ந.க. எண்.1930/2021/பே3, நாள் 01.10.2021.

(3) சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர், கடிதம் ந.க.எண். 4467/2021/பே1, நாள் 04.10.2021.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண். 20782/2021/மாந.அ1 நாள் 04.10.2021 மற்றும் 06.10.2021

(5) அரசாணை (நிலை) எண்.82, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 14.10.2021.

(6) நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண். 20782/2021/மாந.அ1 நாள் 04.10.2021 மற்றும் 26.11.2021

******

**ஆணை :**

சட்டப்பேரவையில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, மேலே ஒன்று முதல் மூன்று வரை படிக்கப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரைகளின் அடிப்படையிலான மேலே நான்காவதாக படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்று, மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், சிவகங்கை மாவட்டம் – மானாமதுரை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – இலால்குடி, முசிறி, சேலம் மாவட்டம் – தாரமங்கலம், இடங்கணசாலை ஆகிய ஐந்து பேரூராட்சிகளை நகராட்சிகளாக அமைத்துருவாக்கலாமென்ற அரசின் உத்தேச முடிவினை அறிவித்தும், இவ்வுத்தேச முடிவு குறித்து தொடர்புடைய பேரூராட்சிப் பகுதியில் வசிப்போர் எவருக்கும் ஆட்சேபணைகள் ஏதுமிருப்பின், அவற்றை அறிவிக்கை அரசிதழில் வெளியிடப்பட்ட ஆறு வார காலத்திற்குள் அரசுக்கு அனுப்பிவைக்கலாமெனவும் ஆணைகள் / அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன.

இவ்வறிவிக்கைகள் 14.10.2021–ம் நாளிட்ட தமிழ்நாடு அரசின் சிறப்பிதழ் எண்.485–ல் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேற்குறிப்பிடப்பட்ட ஐந்து பேரூராட்சிகளை நகராட்சிகளாக தரம் உயர்த்தலாமென்ற உத்தேச முடிவு குறித்து மேற்படி ஆறு வார காலத்தில் ஆட்சேபணைகள் ஏதும் அரசில் பெறப்படவில்லை.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட தமது கடிதத்தில், மேற்கண்ட ஐந்து பேரூராட்சிகளை நகராட்சிகளாக தரம் உயர்த்தலாம் என்ற உத்தேச முடிவு குறித்த அரசாணைக்கு, பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணைகள் ஏதும் இல்லை என பேரூராட்சிகளால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்கள் தெரிவித்துள்ளதாகவும், மேலும், தமது இயக்குநரகத்திலும் மேற்படி அரசாணைக்கு, பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணைகள் ஏதும் பெறப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

4. மேலும், பேரூராட்சிகளின் தீர்மானங்கள் மற்றும் தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களின் பரிந்துரைக்கேற்ப மேற்கண்ட ஐந்து பேரூராட்சிகளை நகராட்சிகளாக தரம் உயர்த்தலாம் என்ற உத்தேச முடிவினை உறுதி செய்து அரசாணை பிறப்பிக்க அரசுக்கு பரிந்துரை செய்வதாகவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5. இந்நிலையில், அரசு கவனமான பரிசீலனைக்குப் பின்னர், தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையை ஏற்று, சிவகங்கை மாவட்டம் – மானாமதுரை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – இலால்குடி, முசிறி, சேலம் மாவட்டம் – தாரமங்கலம், இடங்கணசாலை ஆகிய ஐந்து பேரூராட்சிகளை நகராட்சிகளாக அமைத்துருவாக்கலாம் என்ற உத்தேச முடிவினை உறுதி செய்து, இதன் மூலம் மேற்படி ஐந்து பேரூராட்சிகளை 'நகராட்சிகளாக' அறிவித்து (Declared as Municipalities) அவ்வாறே ஆணையிடுகிறது.

6. இதன்படி, 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு 4(3)–ன் கீழ் இவ்வாணையுடன் இணைக்கப்பட்டவாறான அறிவிக்கைகள் (ஆங்கிலத்தில்), 07.12.2021–ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் வெளியிடப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சிவ் தாஸ் மீனா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்:–**

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–01. (இவ்வரசாணையுடன் இணைக்கப்பட்ட அறிவிக்கைகளை தமிழ்நாடு அரசின் சிறப்பிதழில் வெளியிடவும் மற்றும் அதன் 50 பிரதிகளை அரசுக்கு அனுப்பி வைக்கவும்)
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28.
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–28.
தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
தொடர்புடைய நகராட்சி ஆணையர்கள்.
(நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக)

தொடர்புடைய பேரூராட்சி செயல் அலுவலர்கள்
(பேரூராட்சிகளின் ஆணையர் வழியாக)

**நகல்:–**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9
சட்டத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், அரும்பாக்கம், சென்னை–106.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5, ந.ப.1 மற்றும் அ.ந.2) துறை, சென்னை–9.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**

## APPENDIX.

## NOTIFICATION-I.

In exercise of the powers conferred by sub-section (3) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares the local authority of Manamadurai Town Panchayat to be the Manamadurai Municipality, the draft of the same having been previously published, as required under sub-section (1) of the said section 4.

Based on the above declaration, wards will be divided for the next ordinary election.

## NOTIFICATION – II.

In exercise of the powers conferred by sub-section (3) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares the local authority of Lalgudi Town Panchayat to be the Lalgudi Municipality, the draft of the same having been previously published, as required under sub-section (1) of the said section 4.

Based on the above declaration, wards will be divided for the next ordinary election.

## NOTIFICATION – III.

In exercise of the powers conferred by sub-section (3) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares the local authority of Musiri Town Panchayat to be the Musiri Municipality, the draft of the same having been previously published, as required under sub-section (1) of the said section 4.

Based on the above declaration, wards will be divided for the next ordinary election.

## NOTIFICATION – IV.

In exercise of the powers conferred by sub-section (3) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares the local authority of Tharamangalam Town Panchayat to be the Tharamangalam Municipality, the draft of the same having been previously published, as required under sub-section (1) of the said section 4.

Based on the above declaration, wards will be divided for the next ordinary election.

**NOTIFICATION – V.**

In exercise of the powers conferred by sub-section (3) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby declares the local authority of Edanganasalai Town Panchayat to be the Edanganasalai Municipality, the draft of the same having been previously published, as required under sub-section (1) of the said section 4.

Based on the above declaration, wards will be divided for the next ordinary election.

**SHIV DAS MEENA**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

//True Copy//

7/12/21

SECTION OFFICER.